*2*

# விலங்கிடப்பட்டிருக்கையில் மகிழ்ச்சியாக இருப்பது எவ்வாறு

## (பிலிப்பியர் 1:3–11)

*பவுல் ரோமாபுரியில் விலங்கிடப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்தார் (1:13; 4:22; காண்க எபேசியர் 6:20). அவர் தமது நேரத்தைச் சுய பச்சாதாபத்திலும் முறையிடுதலிலும் செலவிட்டிருக்க முடிந்திருக்கும். அதற்குப் பதிலாக அவர் சந்தோஷம் அடைந்து அதையே செய்யும்படி மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார்: "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (4:4). நீங்களும் நானும் உடல்ரீதியாகக் கட்டிவைக்கப் பட்டிராதிருக்கலாம். ஆனால் நம்மில் பெரும்பான்மையானவர்கள் வெவ்வேறு அளவுகளிலும் நீளங்களிலும் "சங்கிலிகளை" அணிந்து கொண்டிருக்கிறோம்:*

- *உடல்நலக் கோளாறு அல்லது தீவிரமான மருத்துவப் பிரச்சனை.*
- *மகிழ்வற்ற திருமண வாழ்வு அல்லது நமது இருதயங்களை உடைக்கிற பிள்ளைகள்*
- *பணி தொடர்பான மன இறுக்கங்கள்.*
- *வயதான பெற்றோர்.*[1]

*இந்த அப்போஸ்தலர் விலங்கிடப்பட்டிருக்கையில் எவ்வாறு சந்தோஷமாயிருக்க முடியும்? நமது விலங்கிடப்படுதல்களில் நாம் எவ்வாறு சந்தோஷமாயிருக்க முடியும்? இதை இந்தப் பாடத்திற்கான நமது வேதவசனப் பகுதியான பிலிப்பியர் 1:3-11 வசனப் பகுதி கூறுகிறது.*

### கடந்த காலத்தைத் தேவனுக்கு நன்றி செலுத்துதலுடன் கண்ணோக்குங்கள்[2] (1:3-5)

#### அன்று

*முதலாவது பவுல், கடந்த காலத்தை நன்றி செலுத்துதலுடன் கண்ணோக்கியபோது, விலங்கிடப்பட்டிருத்தலில் அவரால் சந்தோஷமாக இருக்க முடிந்தது. பவுலின் வாழ்வு பற்றித் தரமான நாள்வரிசை குறிப்புகள் சரியானவைகளாக உள்ளன என்றால், அவர் பத்து ஆண்டுகள் காலமாகப்*

பிலிப்பி நகரின் சபையுடன் இணைவு கொண்டிருந்தார் என்றாகிறது. அந்த இணைவின் பாசமிக்க நினைவுகளை மாத்திரமே அவர் கொண்டிருந்தார். 6ம் வசனத்தில் அவர், "நான் உங்களை நினைக்கிற *பொழுதெல்லாம்* என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). 4ல் வசனத்தில் அவர்கள் "அனைவருக்காகவும்" தாம் எப்போதும் "சந்தோஷத்தோடே" ஜெபங்களை ஏறெடுத்ததாக அவர் எழுதினார்.[3] "எல்லா" என்ற வார்த்தை இருமுறை பயன்படுத்தப்படுதலானது (தமிழ் வேதாகமத்தில் இது "ஒவ்வொரு" மற்றும் "அனைவருக்காகவும்" என்றுள்ளது) இவ்வசனங்களைத் திகைப்புக்கு உரியதாக்குகிறது! அவைகள் சுய ஆய்வு செய்யும்படி நம்மையும் எழுப்புகின்றன. நாம் உறுப்பினர்களாக இருக்கும் சபைக்குழுமங்கள் பற்றிய விஷயம் என்ன? நம்மைப் பற்றி மற்றவர்கள், "உங்களைப் பற்றி நினைக்கும்போது, நாங்கள் நல்ல நினைவுகளைத் தவிர வேறு எதையும் கொண்டிருப்பதில்லை" என்று கூறுவார்களா? தனிநபர்கள் என்ற வகையில் நம்மைப் பற்றிய விஷயம் என்ன? பிரசங்கியார்கள், "நான் உங்களைப் பற்றி நினைவுகூருகிற எல்லாவற்றிற்காகவும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று நம்மைப் பற்றிக் கூறக்கூடுமா?

இது, பிலிப்பி நகரத்தில் பவுல் இருந்தபோது, அவருக்கு நல்ல விஷயங்கள் மாத்திரமே நடந்தன என்று அர்த்தப்படுகிறா? அல்லது பிலிப்பி நகரில் இருந்த சபை பூரணப்பட்டதாக இருந்தது என்று அர்த்தப்படுகிறதா? இல்லவே இல்லை. இந்த அப்போஸ்தலர் "பிலிப்பிபட்டணத்திலே பாடுபட்டு நிந்தையடைந்திருந்து" இருந்தார் (1 தெசேலானிக்கேயர் 2:2; நடபடிகள் 16:16-24, 35-40). மேலும், பிலிப்பி நகரில் இருந்த சபையில் பிரச்சனைகள் இல்லாமல் இருக்கவில்லை (காண்க - 4:2).[4] எனவே பவுல், அவர்களைப் பற்றி தமது நினைவுகள் *யாவும்* நல்லவையாக இருந்தன என்று கூறிய போது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

ஒருவேளை அவர், பிலிப்பி நகரில் நடந்த மகிழ்ச்சியற்ற நிகழ்ச்சிகளைப் பின்னோக்கிப் பார்த்த போது, அவற்றில் இருந்து வெளிவந்த நன்மையை அவர் கண்டிருக்கலாம் (காண்க ரோமர் 8:28). அவர் தவறாகக் சிறையில் அடைக்கப்பட்டது, சிறைச்சாலைக்காரரும் அவரது வீட்டாரும் மனமாறியதை விளைவித்தது (நடபடிகள் 16:16-34). அவர் நகரத்தை விட்டு வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப் பட்டது, மற்ற இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலை விளைவித்திருந்தது (காண்க நடபடிகள் 16:39, 40; 17:1).

பவுலின் மகிழ்ச்சியான நினைவுகள் பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் மீது கவனம் குவிக்கப்பட்டிருந்தது. அவற்றைக் குறித்தும்கூட, அவர் நல்லதாக இருந்த "தேர்ந்தெடுத்த நினைவை" கொண்டிருந்தார் (காண்க 4:8). அவரது ஊழியத்தை அவர்கள் உண்மையாகத் தாங்கிய வழிமுறை என்பது நல்ல நினைவுகளில் ஒன்றாக இருந்தது: "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரைக்கும் [அவர்கள்] அதற்கு உடன்பட்டவர்களானபடியால்" அவர் தேவனை ஸ்தோத்திரித்தார் (1:3).[5] "உடன்பட்டவர்களாகுதல்" என்பது *koinonia* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை பவுலுக்கு முக்கியமானதாக இருந்தது. இது தனது பல்வேறு வடிவங்களில் இந்தச் சிறிய நிருபத்தில் ஐந்து முறைகள் காணப்படுகிறது. 1:3ல் இது "உடன்பட்டவர்களாகுதல்" என்றும்; 1:7ல் "பங்குள்ளவர்கள்" என்றும்; 2:1 மற்றும் 3:10ல் "ஐக்கியம்" என்றும்; மற்றும் 4:15ல் "உடன்படுதல்"

*என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வினைச்சொல் வடிவமானது அடிப்படையில், "பொதுவில் கொண்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது[6]. பெயர்ச்சொல் வடிவமானது "ஐக்கியம்" மற்றும் "கூட்டாளித்துவம்" என்ற கருத்துக்களைத் தெரிவிக்கிறது.[7] இவ்வார்த்தை, பங்கு பெறுதல் மற்றும் இணைப் பங்கேற்புத்துவம் என்பவற்றின் கருத்துக்களைத் தழுவி நிற்கிறது. இது சமூக, நெருக்கமான மற்றும் கூட்டுறவான கருத்தைச் சொல்விளக்கப்படுத்துகிறது.*

*பிலிப்பியர்கள் பவுலின் ஊழியத்தை, அவருக்காக ஜெபித்தல் உட்பட, பலவழிகளில் தாங்கினர் (1:19). இருப்பினும் அவர் பிலிப்பியர்கள் "சுவிசேஷத்தில் உடன்பட்டனர்" என்பது பற்றிப் பேசியபோது, அவர்களின் நிதி உதவிக்காக அவர் விசேஷமாய் நன்றிசெலுத்தினர். நிதி உதவியைப் பற்றிப் பவுல் பேசியபோது, சிலவேளைகளில் அவர் "கொடுத்தல்" என்பது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (காண்க 4:15), ஆனால் "ஐக்கியம்" போன்ற வார்த்தைகளுக்கு அவர் முன்னுரிமை விருப்பம் அளித்தார். கொடுத்தல் பற்றிய அவரது நீண்ட உரையாடலில் (2 கொரிந்தியர் 8; 9), அவர் "தயவு" (கொடை), "பங்கேற்றல்" (ஐக்கியம்) மற்றும் "உதவி" என்பவை போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (காண்க 2 கொரிந்தியர் 8:4).*

*பிலிப்பியர்கள் தங்கள் பொதுவான விசுவாசத்தினால், தாங்கள் கொண்டிருந்தவற்றைப் பவுலுடன் பகிர்ந்து கொண்டனர். 4ம் அதிகாரத்தில் இந்த அப்போஸ்தலர், "மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள்அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும். என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" என்று எழுதினார் (4:15, 16). லீதியாள், பவுலுக்கும் அவரது உடன் ஊழியர்களுக்கும் தனது இல்லத்தை திறந்தபோது, பவுலுடன் அவர்களின் பகிர்ந்து கொள்ளுதல் தொடங்கியிருந்தது. அது எப்பாப்பிராதீத்துவினால் ரோமாபுரிக்குக் கொண்டவரப்பட்ட அவர்களின் சமீபத்திய நன்கொடை வரையிலும் தொடர்ந்தது (4:10, 18).*

*முன்னாள் [வெளிநாடு சென்று] ஊழியம் செய்தவன் என்ற வகையில் நான், பிலிப்பியர்களின் உதவி பற்றிப் பவுலின் வார்த்தைகளை விரும்புகிறேன்: "சுவிசேஷத்திற்கு உடன்படுதல்" ["ஐக்கியம்": KJV]. எனது குடும்பத்தினர் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தபோது, நாங்கள் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருமுறை விடுமுறைக்காக அமெரிக்காவுக்குத் திரும்பிச் செல்வது உண்டு. எங்களது ஊழியத்திற்கு நிதி உதவி அளித்த சபைக்குழுமங்களுக்கு நான் செல்லுவேன்: எங்களது ஊழியத்தில் அவர்களின் "ஐக்கியத்திற்காக" அவர்களுக்கு நான் நன்றி செலுத்தி, அவர்கள் உதவியை அனுப்பிய போது, அவர்கள் எங்கள் ஊழியத்தில் பங்கேற்றனர் என்பதை அவர்களுக்குத் தெளிவாக்குவேன்.*

## இன்று

*பவுல் கடந்த காலத்தைத் தேவனுக்கு நன்றி செலுத்துதலுடன் கண்ணோக்கியதால், அவர் விலங்கிடப் பட்டிருக்கையில் அவரால் சந்தோஷமாக இருக்க முடிந்தது. நீங்களும் நானும், நமது வாழ்வில் நடந்துள்ள மற்றும் ஆண்களும் பெண்களும் கசப்புணர்வு கொள்வதில் முடிந்த மோசமான*

விஷயங்கள் மீது கவனம் குவிக்க முடியும் - அல்லது நாம் நல்ல விஷயங்களை நினைத்துக் கர்த்தருக்கு நன்றி செலுத்தி சந்தோஷமாக இருக்கமுடியும். *சந்தோஷம் என்பது விருப்பத் தேர்வாக உள்ளது* என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தை நான் வைத்திருக்கிறேன்.[8] சிலர், இந்தத் தலைப்பு சற்றே மிகைப் படுத்தப்பட்ட கூற்றாக உள்ளது என்று நினைக்கலாம், ஆனால் நாம் சந்தோஷமாக இருக்கிறோமா இல்லையா என்பது, வாழ்வை நாம் கண்ணோக்கும் வழிமுறையையே பெரிதும் சார்ந்துள்ளது என்பது உண்மையாகவே உள்ளது. எல்லா வீலர் வில்காக்ஸ் என்பவர் இதை “கப்பல் பாய்களின் அமைவு” என்று அழைத்தார்:

ஒரே விதமான காற்று வீசும் கடலில் ஒரு கப்பல் கிழக்கிலும் இன்னொன்று
 மேற்கிலும் பயணம் செய்கிறது.
 பலத்த காற்றல்ல ஆனால் கப்பல் பாய்களின் அமைவே
 எவ்வழியே நாம் செல்கிறோம் என்று
 நமக்குக் கூறுகிறது.

கடலின் காற்றுப்போல விதியின் வழிகள் உள்ளன:
 நாம் வாழ்வினூடே கடற்பயணம் செல்லுகையில்
 அமைதியோ அல்லது கலகமோ அல்ல
 ஆனால் ஆத்துமாவின் அமைவுதான்
 இலக்கைத் தீர்மானிக்கிறது.[9]

## தேவன்மீதான உறுதியான நம்பிக்கையுடன் நிகழ்காலத்தைக் கண்ணோக்குங்கள் (1:6-8)

### அன்று

பிலிப்பி நகரத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிப் பவுல் நினைத்தபோது, அவருக்குள் உணர்வு எழுச்சி பெருக்கெடுத்து ஓடியது. அன்பு என்பது ஒரு உணர்வெழுச்சியாக இருந்தது. அவர்களிடத்தில் அவர், “உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கி[றேன்]” என்று கூறினார் (வசனம் 7). வார்ரென் W. வயர்ஸ்ப் என்பவர் அந்தச் சொற்றொடரைப் பற்றி எடுத்துரைக்கப் பழைய ஏற்பாட்டு உதாரணம் ஒன்றைக் கருத்தாகத் தெரிவித்தார்:

> பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள், ஏபோத்து என்ற விசேஷித்த உடையொன்றைத் தங்கள் இருதயப் பகுதிக்கு மேலாக அணிந்தனர். அதின் மீது, இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் பெயர்கள், ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு கல்லில் என்ற வகையில், பொறிக்கப்பட்ட பன்னிரெண்டு கற்கள் இருந்தன ([யாத்திராகமம்] 28:15-29). அவர் தமது இருதயத்தில் மக்களை அன்பினால் சுமந்தார், அதுபோன்றே பவுலும் செய்தார்.[10]

மேலும் பவுல், “இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்கு தேவனே எனக்குச் சாட்சி” என்றும் எழுதினார் (வசனம் 8).

"உருக்கமான அன்பிலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ("bowels" என்ற) கிரேக்க வார்த்தையானது உள்ளான உறுப்புகள் என்பதற்கான "viscera" என்ற வார்த்தையின் கூட்டுச் சொற்றொடராக உள்ளது.[11] அந்த நாட்களில் இந்த உறுப்புகள் உருக்கமான அன்பின் அமர்விடம் என்று கருதப்பட்டன.[12] பவுல் அவர்களுக்காக "உருக்கமான அன்புடன்" ஏங்கியதாக கூறியபோது, அவர் தமது உணர்வெழுச்சியின் ஆழத்தையும் பலத்தையும் வெளிப்படுத்தினார். இன்றைய நாட்களில் நாம் "நான் என் முழு இருதயத்துடன் உனக்காக ஏங்குகிறேன்" என்று கூறுவோம். இருப்பினும் "உருக்கமான அன்பு" என்ற வார்த்தையைக் காட்டிலும் அதை தகுதிப்படுத்தும் "கிறிஸ்து இயேசுவின்" என்ற வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. கர்த்தரைப் பண்புபடுத்தும் அன்பைக் கொண்டு அப்போஸ்தலர் அவர்கள் மீது அன்பு காண்பித்தார்![13] இது ஒரு சிறு உரிமைகோருதலாக இருப்பதில்லை - ஆனால் அவர், தேவனைத் தமது சாட்சியாக அழைத்த வகையில் அது உண்மையாக இருந்தது என்று மிகவும் நிச்சயமாயிருந்தார்.

பவுல் தமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு நினைவூட்டியபடி, அவர் *நம்பிக்கையால்* நிரப்பப்பட்டவராகவும் இருந்தார். 5ம் வசனத்தில், "என்று நம்பி" என்றுள்ளது. நம்பிக்கை என்பது நமது பாடத்தில் நான் வலியுறுத்த விரும்பும் இரண்டாவது காரணியாக உள்ளது: பவுல் நிகழ்காலத்தை நம்பிக்கையுடன் கண்ணோக்க முடிந்ததால், அவர் விலங்கிடப் பட்டிருக்கையிலும் சந்தோஷமாக இருந்தார் ...

நான் அந்தக் கூற்றை முடிக்கும் முன்னர், "நம்பிக்கை" என்பது பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறுவது அவசியமாகிறது. "நம்பிக்கை" என்பதன் ஆய்வுக்கருத்து இந்த நிருபம் முழுவதிலும் பரவி ஓடுகிறது. நிச்சயமற்ற தன்மை நிரம்பியுள்ள உலகத்தில், இந்த ஆய்வுக்கருத்து புத்துணர்ச்சி தருவதாக உள்ளது. "நம்பிக்கை" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் பல்வேரு வடிவங்கள் இந்தப் புத்தகத்தில் குறைந்தது ஐந்து முறைகள் காணப்படுகின்றன: 1:5ல் "confident" (நம்பி) என்ற ஆங்கில வார்த்தையும்; 1:14ல் "trusting" (திடன்கொண்டு) என்ற வார்த்தையும்; 1:25ல் "convinced" (நிச்சயத்தை) என்ற வார்த்தையும்; 3:4ல் "confidence" (நம்பிக்கை) என்ற வார்த்தை (இருமுறை)யும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நம்பிக்கை என்ற வார்த்தை குறித்து, சரியான தராசைக் கண்டறிதல் சிரமமானதாக உள்ளது. மிக அதிகமாக நம்பிக்கை உடையவர்கள், வெறுப்பு உண்டாக்குபவர்களாகவும் பிறரைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வன்முறையாகக் கொண்டுவருபவராகவும் இருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், நம்பிக்கை குறைவு உள்ளவர்கள் தமக்குத் தாமே மிக மோசமான விரோதியாகின்றார்.

இப்போது எனது கூற்றை முடிக்க என்னை அனுமதியுங்கள்: பவுல், தேவன் *மீது* நம்பிக்கை கொண்டு நிகழ்காலத்தைக் கண்ணோக்க முடிந்ததால், அவர் விலங்கிடப் பட்டிருக்கையிலும் சந்தோஷமாக இருந்தார். அவர் கொண்டிருந்த *சுயநம்பிக்கையைப்* பார்க்கிலும், அவர் *தேவன் மீது* கொண்டிருந்த நம்பிக்கை பெரிதாக இருந்தது. தேவன் யாராக இருக்கிறார் என்பதே பவுல் நம்பிக்கையினால் நிரப்பப்பட முதன்மைக் காரணமாக இருந்தது: அவர் [தேவன்] நமக்குள் கிரியை செய்கிறார். பவுல், "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி"

என்று கூறினார். இதில் அவர் எதைக் குறித்து நம்பிக்கையாக இருந்தார் என்று கூறினார்: "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று." அடுத்த அதிகாரத்தில் இந்த அப்போஸ்தலர், "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" என்று எழுதினார் (2:13). கிறிஸ்தவர்களுக்குள் தேவன் பல வகையில் கிரியை செய்கிறார்: அவர் தமது வசனத்தின் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார் (காண்க எபிரெயர் 4:12). அவர் நமது வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகள் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார் (காண்க யாக்கோபு 1:2, 3; ரோமர் 5:3-5). அவர் மக்கள் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார் (காண்க 2 கொரிந்தியர் 7:6). அவர் உள்ளாக வாசம்பண்ணும் தமது ஆவியானவரின் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார், இது ஞானஸ்நானத்தின் போது எல்லா கிறிஸ்தவர்களும் பெற்றுக்கொள்ளுகிற *அற்புதமற்ற* கொடையாக உள்ளது (நடபடிகள் 2:38; காண்க ரோமர் 8:9, 26-28).

பவுல், பிலிப்பி நகரில் தேவன் கிரியை செய்ததைக் கண்டிருந்தார், மற்றும் அங்கு நிறைவேற்றப் பட்டிருந்த ஒவ்வொரு நற்செயலுக்காகவும் கர்த்தர் துதிக்கப் பாத்திரராக இருந்தார் என்று அவர் நம்பினார். 5ம் வசனத்தில் அவர், பிலிப்பி நகரில் தேவன் சபையின் தொடக்கத்திற்காகத் தேவனுக்குப் புகழ்ச்சியை உரித்தாக்கினார்: "உங்களின் நற்கிரியையைத் தொடங்கினவர்." மேலும் அவர், தேவன் தொடங்கியதை அவர் முடித்து வைப்பார் என்று நம்பினார்: "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர்." மேலும் அவர், "தேவன் தெடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி," "முடிய" என்பது "முடிவு வரையிலும் நடத்துதல்" என்று அர்த்தப்படும் கிரேக்கக் கூட்டு வினைச்சொல்லாகும்.[14] "இயேசு கிறிஸ்துவின் நாள்" என்பது கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:2). அந்த விசேஷித்த நாளைப்பற்றிப் பவுல், பிலிப்பியர் 3:20, 21ல் மீண்டும் குறிப்பிட்டார். உலகம் அழிந்து போகும் வரையிலும், தேவன் பிலிப்பியர்களின் (மற்றும் பிற கிறிஸ்தவர்களின்) வாழ்வில் தேவன் தொடர்ந்து கிரியை செய்வார், அவர்களில் தமது நோக்கத்தை நிறைவேற்றுவார் என்று அப்போஸ்தலர் நம்பினார்.

தேவன் தமது கிரியையை நிறைவேற்றுவார் என்று பவுல் பேசியபோது, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் விழுந்துபோக இயலாது என்று மறைமுகமாக உணர்த்த அவர் நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பதை நான் இவ்விடத்தில் கூடுதலாகக் கூறவேண்டியிருக்கலாம். அந்தப் பாடக் கருத்தைப் பற்றி நாம் 3ம் அதிகாரத்தைப் படிக்கையில் இன்னும் அதிகமாக கலந்துரையாடுவோம். இருப்பினும் நாம் விழுந்து *போகாதிருக்கும்படிப்* பவுல் நமக்கு பலமான ஊக்குவிப்பைக் கொடுக்கிறார்: தேவன் நம்மைப் பற்றி அக்கறையாயிருந்து நமது வாழ்வில் செயல்படுபவராக இருக்கிறார்!

பவுலினால் வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையானது, தேவன் யாராக இருந்தார் (மற்றும் இருக்கிறார்) என்பதை முதன்மையான காரணமாகக் கொண்டிருந்தது, ஆனால் அவரது நம்பிக்கையானது, பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் யாராக இருந்தனர் என்பதைக் கொண்டு பலப்படுத்தப்பட்டது: தேவன் கிரியை *செய்யக்கூடிய* வகையிலான மக்களாக இருந்தனர். தேவன், தாம் கிரியை செய்வதற்குப் பூரணமாக மக்கள் வேண்டும் என்று

*கண்ணோக்குவதில்லை; அவர் அப்படிச் செய்தார் என்றால், அவர் எக்காலத்திலும் எவர் ஒருவருக்குள்ளும் கிரியை செய்ய முடியாது.*[15] *மாறாக அவர். தங்கள் வாழ்வில் தம்மைக் கிரியை செய்ய* அனுமதிப்பவர்கள் *யார் என்று கண்ணோக்கித் தேடுகிறார். தேவன் பிலிப்பியர்களுக்குள் தமது நற்கிரியையை நிறைவாக்குவார் என்ற தமது நம்பிக்கையைப் பவுல் வெளிப்படுத்திய பின்பு (1:5), அவர் "என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால், உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 7).*

*பிலிப்பி நகரத்தில் இருந்த கிறிஸ்தவர்களின் வாழ்வில் கிரியை செய்யும்படி தேவனை அனுமதித்த பண்புகள் யாவை? மீண்டும் பவுல்* koinonia ("partaker") *["பங்குள்ளவர்"] என்ற வார்த்தையைப் பயன்படுத்தி தமது வாசகர்கள் "பொதுவில்" கொண்டிருக்கும் மூன்று விஷயங்களை குறிப்பிட்டார்: அவரைப் பொறுத்தமட்டிலும், சுவிசேஷத்தைப் பொறுத்தமட்டிலும் மற்றும் கிருபையை பொறுத்த மட்டிலும் அவர்களின் ஐக்கியம் (வசனம் 7).*

- *பவுலுடன் அவர்களின் ஐக்கியத்தைத் பொறுத்தமட்டில், அவர் சிறையில் அடைக்கப்பட்டபோது, மற்றவர்களைப் போல் அவர்கள் தங்கள் முதுகுகளை அவருக்குக் காண்பிக்கவில்லை (காண்க -1:15, 16; 2 தீமோத்தேயு 1:8; 4:16). அவர்கள் அவருக்கு உதவி செய்ய அணிவகுக்கத் தொடர்ந்தனர்.*
- *சுவிசேஷத்துடன் அவர்களின் ஐக்கியத்தைப் பொறுத்தமட்டில், அது தாக்கப்பட்ட போது அதை அவர்கள் தற்காத்து உறுதிப்படுத்தினர். 7ம் வசனத்தில் (ஆங்கில வேதாகமத்தில்) உள்ள* "defense" *"தற்காத்தல்" என்ற வார்த்தையில் இருந்தே நாம்* "apologetics" *"தற்காப்பு வாதம் செய்தல்" என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.*[16] *இது "வாய்மொழியில் தற்காத்தல்"*[17] *என்பதாகவும் மறுப்புகளுக்குப் பதில் அளிக்கும் பணிப்பொறுப்பை உள்ளடக்குவதாகவும் இருக்கிறது. "திடப்படுத்தி" என்பது சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லுதலின் அதிக நேர்மறையான பகுதியாக உள்ளது: இது விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்யும் வகையில் போதித்தல் மற்றும் புத்திகூறுதல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (காண்க நடபடிகள் 14:21, 22).*
- *கிருபையுடன் அவர்களின் ஐக்கியத்தைப் பொறுத்தமட்டில், பவுல் தமது நிலை மற்றும் தாம் செய்த எல்லாவற்றையும் சுற்றிச் சூழச்செய்யும் வகையில் "கிருபை" (தகுதியற்று இருந்தும் தரப்படும் தயவு) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (காண்க ரோமர் 1:5). அவர் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருந்தார், அவர் தமது அப்போஸ்தலத்துவத்தைக் கிருபையினால் பெற்றுக் கொண்டிருந்தார், மற்றும் அவர் தேவனுடைய கிருபையினால் ஊழியம் செய்தார். பிலிப்பியர்கள் பவுலுக்கும் சுவிசேஷத்திற்கும் ஆதரவு அளித்தபோது, அவர்கள் இந்த கிருபைக்குப் "பங்குள்ளவர்கள்" ஆயினர்.*

*பிலிப்பியர்கள் மீது பவுல் நம்பிக்கை வைக்கக் கூடியவராக இருந்தது நல்லதாக உள்ளது. ஒருவேளை நீங்கள், இன்னொரு நபர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து போகுதல் என்பது இருதயத்தை எவ்வளவாக உடையச் செய்யும் என்பதை அறிந்திருக்கலாம். இருப்பினும், பவுல் விலங்கிடப்பட்டிருக்கையிலும் அவரால் எவ்வாறு சந்தோஷமாக இருக்க முடிந்தது என்பதற்கான இரண்டாவது காரணத்தை நாம் [படித்து] முடிக்கையில், அந்த நம்பிக்கைக்கான அவரது முதன்மைக் காரணத்திற்கு நாம் திரும்புதல் அவசியமாக உள்ளது: அவர் தேவன் மீது நம்பிக்கை கொண்டவராக - அதாவது தமது வாழ்விலும் மற்ற கிறிஸ்தவர்களின் வாழ்விலும் தேவன் தொடர்ந்து கிரியை செய்வார் என்ற நம்பிக்கை கொண்டவராக - இருந்தார்.*

## இன்று

*வாழ்வில் நமக்கு விடப்படும் அறைகூவல்கள் என்னவாக இருப்பினும், நாம் தேவனுக்கு உண்மைநிறைந்த பிள்ளைகளாக இருந்தால், அந்த அறைகூவல்களை நாம் தன்னந்தனியே எதிர்கொள்வதில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுதல் அவசியமாக உள்ளது. நமது வாழ்வில் தேவன் இன்னமும் ஜீவனுள்ளவராகவும் செயல்படுபவராகவும் இருக்கிறார்.[18] பவுல் கர்த்தரை "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர்" என்று விவரித்தார் (எபேசியர் 3:20). தேவன் தொடங்கியதை அவர் முடித்து வைப்பார் என்பதையும் நாம் நினைவில் வைத்தல் அவசியமாக உள்ளது. அவர் "ஒரு வேலையைப் பாதியில் விட்டுச் செல்லுபவராக" இருப்பதில்லை.*

*நமது பிரச்சனைகள் உட்பட, நமது வாழ்வைக் கர்த்தரிடமாய்த் திருப்புதல் என்பது சந்தோஷத்தின் "இரகசியங்களில்" ஒன்றாக உள்ளது. ஒரு காலத்தில், இரவும் பகலுமாகத் தனது வர்த்தகத்தைக் குறித்து மன அலைக்கழிப்பைக் கொண்டிருந்த ஒரு மனிதர் இருந்தார், ஒரு நாள் அவர் அதைத் தேவனிடத்தில் திருப்ப முடிவுசெய்தார். "இது உம்முடையது" என்ற அவர் கர்த்தரிடத்தில் கூறினார். கடைசியில் அவர் மனதில் சமாதானத்தைப் பெற்றார் மற்றும் இரவில் அவரால் உறங்க முடிந்தது. பின்பு ஒருநாள் மாலை வேளையில், அவரது வர்த்தகம் நடைபெறும் இடத்தில் தீப்பற்றிக் கொண்டது என்று கூறிய தொலைபேசி அழைப்பினால் அவர் எழுப்பப்பட்டார். அவர் அந்த இடத்திற்குச் சென்று அந்தக் கட்டிடம் எரிவதை அமைதியாகக் கவனித்தார். அருகில் இருந்தவர்கள் திகைத்துப் போயினர். அவரிடத்தில் அவர்கள், "உங்களால் எப்படி இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது?" என்று கேட்டனர். அவர் புன்முறுவலுடன், "நான் இந்த நிருவனத்தைக் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டேன். அவர் இதைத் தரைமட்டமாக்கும்படி எரிக்க விரும்பினால், அது அவர் பாடு" என்று அவர் பதில் அளித்தார்.[19] இப்படிப்பட்ட பதிலானது முதலில் உங்களுக்கு விசித்திரமானதாக, நியாயமற்றதாகக்கூடத் தோன்றலாம், ஆனால் மனதில் சமாதானத்தைப் பராமரிக்க அவ்வகையான எண்ணப்போக்கு அத்தியாவசியமானதாக உள்ளது. சார்லஸ் ஸ்வின்டால் என்பவர், "ஒவ்வொரு விஷயத்தையும் தளர்வாகப் பிடித்துக் கொண்டு தங்கள் வாழ்வின் கவலைகள், மன இறுக்கம் நிறைந்த நிலைகள் மற்றும் பயமூட்டும் விஷயங்களைத் தேவனுடைய பராமரிப்பின்கீழ் விடக்கற்றுக் கொண்டுள்ளவர்களே நான் அறிந்த வரையில் மிகவும் சந்தோஷமான*

மனிதர்களாக உள்ளனர்" என்று எழுதினார்.[20] உங்கள் "விலங்குகளில்" நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால், நிகழ்காலத்தை தேவன் மீதான நம்பிக்கையுடன் கண்ணோக்குங்கள்.

## எதிர்காலத்தைத் தேவனிடத்தில் ஜெபித்தலுடன் கண்ணோக்குங்கள் (1:9-11)

### *அன்று*

*கடைசியாக, பவுல் எதிர்காலத்தைத் தேவனிடத்தில் ஜெபித்தலுடன் கண்ணோக்கியதால் அவர் தாம் விலங்கிடப் பட்டிருக்கையிலும் சந்தோஷமாக இருந்தார். எதிர்வந்து கொண்டிருந்ததைப் பற்றி, அவர் வாழ்வின் உண்மை நிலைகளைப் புறக்கணித்து விடவில்லை;[21] பிலிப்பியர்கள் அறைகூவல்களைத் தொடர்ந்து எதிர்கொள்ளுவார்கள் என்றுஅவர் அறிந்திருந்தார். அவரது தீர்வு என்னதாக இருந்தது? கவலை? இல்லை, ஜெபம் என்பதே அவரது பதிலாக இருந்தது. குறிப்பாக அவர், பிலிப்பியர்கள் கர்த்தருக்குள் பக்குவமடையத் தொடர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்.*

> *மேலும்,[22] உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்[22] (வசனங்கள் 9-11).*

*முதலாவதாக, அவர்கள் அன்பில் வளர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்: "உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்." "அன்பு" என்பதற்கான agape என்ற கிரேக்க வார்த்தையானது, அன்புகூரப்படுபவர்களுக்கு "மிகச்சிறந்தவற்றை" நாடுகிற சுயநலமற்ற அன்பாக உள்ளது. அப்போஸ்தலர், ஒப்புமைச் சொற்களைக் குவித்தார்: அவர்களின் அன்பு "பெருகவேண்டும்," அதாவது அது "அதிகமாய்" பெருக வேண்டும் என்று ஜெபித்தார், மற்றும் "அதிகமதிகமாய்ப் பெருகவேண்டும்" என்று அவர் கூடுதலாகக் கூறினார். அவர்களின் அன்பானது வல்லமையான ஒரு ஊற்றைப் போல், அளவிலும் பலத்திலும் எப்போதும் வளருவதாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இருப்பினும் அன்பிற்குத் திசை தேவைப் படுகிறது. கட்டுப்பாடு இல்லாத ஒரு ஆறானது பேரழிவை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடும்.[23] இருதயமும் மூளையும் ஒன்றாகச் செயல்பட வேண்டும் (காண்க மத்தேயு 22:37; ரோமர் 10:2). இவ்வாறாக பவுல் தமது ஜெபத்தில் இன்னும் இரு விஷயங்களை உள்ளடக்கினார்.*

*அடுத்ததாக, அவர்கள் அறிவில் வளர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்:* NASB *வேதாகமத்தில்* "in real knowledge" *என்றுள்ளது.* "Real knowledge" *என்ற சொற்றொடர், "அறிவு" என்பதற்கான (gnosis என்ற) கிரேக்க வார்த்தையுடன் "மீது" (epi) என்ற முன்னிடைச் சொல்லை இணைத்துள்ள ஒரு கிரேக்கக்*

கூட்டுவார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது "சில விஷயங்கள் கூட்டப்பட்ட" அறிவைக் குறிக்கிறது. இது மேலோட்டமான அறிவல்ல. "*எல்லா உணர்விலும்*"[24] என்ற வார்த்தை, முழுமையான அறிவைக் கொண்டிருத்தலை அர்த்தப்படுத்துகிறது. CJB வேதாகமத்தில் "fullness of knowledge" ("அறிவின் முழுமைத்தன்மை") என்றுள்ளது. ஆவிக்குரிய அறிவை, தேவன் மற்றும் அவரது சித்தம் பற்றிய அறிவைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட அறிவு, தேவனுடைய வசனத்தைக் கவனமாகப் படித்தல் மற்றும் ஒருவரின் வாழ்வில் அது அர்த்தப்படுத்துவது என்ன என்பது பற்றிய எல்லாவற்றையும் தியானித்தல் ஆகியவற்றில் இருந்து வருகிறது.

பிலிப்பியருக்காகப் பவுலின் ஜெபத்தில் இத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டதாக அடுத்த விஷயம் உள்ளது: அவர்கள், *சரியானது மற்றும் தவறானது ஆகியவற்றைப் பகுத்துணரும் திறனில்* வளர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்: "மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது … எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்." இந்த வார்த்தைகளில் அதிகமான கருத்துக்கள் பொதியப்பட்டுள்ளன. "உணர்வு" என்ற வார்த்தையைக் கொண்டு நாம் தொடங்குவோம். "உணர்வு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, "பகுத்தறிதல், புரிந்துகொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது.[25] NIV வேதாகமத்தில் "depth of insight" என்றுள்ளது. ஒருவர், "பகுத்துணர" கூடியவராக இருக்கும்போது, அவரால் விஷயங்களுக்கு இடையில் வித்தியாசப்படுத்துதலைச் செய்ய முடியும். இந்தத் திறன், பக்குவம் அடைந்திருத்தலின் அடையாளமாக உள்ளது: நான்கு கால்கள் கொண்ட ஒவ்வொரு மிருகமும் நாய்தான் என்று ஒரு குழந்தை நினைக்கலாம்; ஆனால் அந்தக் குழந்தை வளருகையில், ஒரு நாய்க்கும் ஒரு பசுவிற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் பகுத்துணரக் கற்றுக்கொள்கிறது.

பிலிப்பியர்கள் ஆவிக்குரிய வகையில் வித்தியாசப்படுத்தக் கூடிய அளவிற்கு வளர வேண்டும் என்று பவுல் விரும்பினார். எபிரெயர் 5:14ம் வசனம், "நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும்" என்பதைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான பகுத்தறிதல் பிலிப்பியர் 1:9, 10ம் வசனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. NCV வேதாகமம், "நீங்கள் உங்கள் அன்புடன் அறிவையும் புரிந்துகொள்ளுதலையும் கொண்டிருக்க வேண்டும் என்றும், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வேறுபாட்டை நீங்கள் காண வேண்டும்" என்ற பவுலின் விருப்பம் பற்றிப் பேசுகிறது.

9ம் வசனத்தில் உள்ள "ஒப்புக்கொள்ளுதல்" என்ற சொற்றொடர், சில விஷயங்கள் பரிசோதிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு மற்றும் உண்மை யானவை என்று கண்டறியப்பட்டதைச் சுட்டிக் காண்பிக்கிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில்) பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை "நிரூபித்தல்" என்பதற்கு உறவுவார்த்தையாக உள்ளது; இது உலோகத்தைச் சோதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது (எடுத்துக்காட்டாக, நீதிமொழிகள் 17:3ஐக் காணவும்) நாம் ஒவ்வொருவரையும், ஒவ்வொரு போதனையையும் ஒவ்வொரு செயலையும் சோதிக்கக் கற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். "வசனத்தைச் சோதித்தல்" மற்றும் "கனியைச் சோதித்தல்" என்பது இரண்டு முக்கியமான சோதனைகளாக உள்ளன (காண்க

மத்தேயு 7:16; ரோமர் 12:2; 2 கொரிந்தியர் 2:9; 13:5; யாக்கோபு 1:22; 1 யோவான் 4:1; வெளிப்படுத்தின விசேஷம் 2:2). எல்லாவற்றையும் இவ்வகைகளில் சோதித்தறியக் கூடியவர்களாக இருத்தல் என்பது சாதாரண சாதனையல்ல; சரியானது மற்றும் தவறானது, நல்லது மற்றும் தீயது ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசப்படுத்தும் திறனில் பலர் குறைவுபடுகின்றனர்.

இருப்பினும் பவுல், தமது வாசகர்கள் தங்கள் பகுத்தறிவில் இன்னும் சற்றுத் தூரம் அடியெடுத்து வைத்தவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். அவர்கள், "*உத்தமமானவைகளை* ... ஒப்புக்கொள்ள" வேண்டும் என்று விரும்பினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "உத்தமமானவைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (Gk.: *diaphero*) "மாறுபட்டு இருப்பவை" என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. 1:10ன் சந்தர்ப்பப்பொருளில் "தனிச்சிறந்தது" என்ற வார்த்தை இக்கருத்தை தருகிறது: "தனிச்சிறந்த தன்மையினால் விலைமதிப்பு அற்றதாக உள்ள பொருள்/விஷயம்." 4:8ம் வசனத்தை நாம் அடைகையில், "புண்ணியமான" மற்றும் "புகழ்ச்சியான" விஷயங்களைப் பற்றி படிப்போம். நல்லது எது என்று பகுத்தறிதல் மாத்திரமல்ல, ஆனால் மிகச் சிறந்தது எது, மிகமிகச் சிறந்தது எது - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ''உண்மையிலேயே'' மிகச் சிறப்பானது எது என்று பகுத்தறிதலும் முக்கியமானதாக உள்ளது. காலம் மற்றும் திறன்களைப் பயன்படுத்துதல் பற்றி, நல்லது மற்றும் தீயது ஆகியவற்றைப் பகுத்தறிதல் அல்ல, ஆனால் நல்லது மிக நல்லது மற்றும் மிகமிக நல்லது ஆகியவற்றைப் பகுத்தறிதலே எனக்கு மிகவும் சிரமமான முடிவுகளாக இருந்துள்ளன: எடுத்துக்காட்டாக, எனது நேரம் மற்றும் திறன்களை நான் எவ்வாறு மிகச்சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்?

பிலிப்பியர்கள் கிறிஸ்தவப் பண்பில் வளர வேண்டும் என்றும் பவுல் ஜெபித்தார். "கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் (sincere) இடறலற்றவர்களுமாயிருக்கவும் (blameless) வேண்டுதல் செய்கிறேன்.'' Sincere என்ற ஆங்கில வார்த்தை, "இல்லாத" என்று அர்த்தப்படும் sin மற்றும் "மெழுகு" என்று அர்த்தப்படும் cere என்ற இரு இலத்தீன் வார்த்தைகளில் இருந்து வருகிறது.

> இத்தாலியில் இருந்த சலவைக்கல் விற்பவர்கள் மற்றும் பீங்கான் விற்கும் சில வர்த்தகர்கள், தங்கள் விற்பனைப் பொருள்களில் உள்ள குறைகளை, அவற்றின் வெடிப்புகள் மற்றும் அழுக்குகளில் குறிப்பிட்ட வகையான மெழுகை ஊற்றி நிரப்பி மறைப்பதுண்டு; ஆனால் மிகப் புகழ்வாய்ந்த வியாபாரிகள், தங்கள் பொருள்கள், *sin cere* (மெழுகு இல்லாதவை) என்று விளம்பரப்படுத்துவது உண்டு; இதிலிருந்து "sincere" என்ற ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் தரவழைக்கப்பட்டது. "வஞ்சகம் அற்ற" அல்லது "மாய்மாலம் அற்ற" என்பதே ... இதன் அர்த்தமாக உள்ளது.[26]

மூலவசனப் பகுதியானது "சூரியப் பிரகாச நியாயந்தீர்க்கப்பட்டது" என்று அடிப்படையில் அர்த்தப்படும் கூட்டு வார்த்தை ஒன்றைக் கொண்டுள்ளது.[27] அவ்வப்போது நான், எனது இருளான அறையில் - நான் சூரிய வெளிச்சத்தில் காணும்வரையில் - கொண்டிருந்த மென்மையான பஞ்சுத் துணியைப்பற்றி நினைப்பது உண்டு. சூரிய வெளிச்சமானது அதில் உள்ள ஒவ்வொரு குற்றம்

குறையையும் வெளிப்படுத்தும் வகையைக் கொண்டுள்ளது. சிலவேளைகளில் "சூரிய ஒளிப்பரிசோதனை" உண்மையானதாகவும் நம்பக்கூடியதாகவும் உள்ளது. ஆங்கில மற்றும் கிரேக்க வார்த்தைகள் ஒரே அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளன: "மாய்மாலம் எதுவும் இன்றி."

"துப்புரவானவர்கள்" என்ற வார்த்தையுடன் பவுல், "இடறலற்றவர்கள்" என்ற சொற்றொடரைக் கூடுதலாகக் கூறினார். "இடறலற்றவர்கள்" என்ற வார்த்தை "பூரணமானவர்கள்" என்று அர்த்தப்படுவதில்லை; அது அவ்வாறு அர்த்தப்பட்டது என்றால், நம்மில் எவரும் தகுதியுடையவர்கள் ஆக இயலாது (ரோமர் 3:23). அது நாம் மற்றவர்களால் ஒருக்காலும் "இடறல்படுத்தப்படாது" இருப்போம் என்றும் அர்த்தப்படுவதில்லை; இயேசுவும் அப்போஸ்தலர்களுமே கூட தவறாகச் செயல்பட்டதாகப் பிறரால் குற்றம்சாட்டப்பட்டனர் (காண்க மத்தேயு 27:12; நடபடிகள் 24:2; 3 யோவான் 10). இது, நாம் சரியானவற்றைச் செய்ய முயற்சி செய்கிறோம் என்பதைப் பிறர் காணக்கூடிய வகையில் வாழும் வாழ்வைக் குறிப்பிடுகிறது. "இடறலற்றவர்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை "இடறிவிழுதல்" என்பதற்கான வார்த்தையுடன் எதிர்மறை முன்சொல் ஒன்றை இணைத்துப் பெற்ற (*aproskopos* என்ற) வார்த்தையாக உள்ளது;[28] இது "இடறிவிழுதல் இன்றி" என்ற நேரடி அர்த்தம் தருகிறது. நமது திறனில் மிகச்சிறப்பான வகையில், நாம் "இடறி விழாது" தேவபக்தியுள்ள வாழ்வை வாழவேண்டும் (காண்க 2 பேதுரு 1:10). மேலும் நாம் மற்றவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றைப் பற்றிய உணர்வறிவு உள்ளவர்களாக இருந்து - அவர்கள் "இடறல் அடைய" காரணம் ஆகிவிடாதவாறு வாழ முயற்சி மேற்கொள்ள வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 8:13; 1 யோவான் 2:10). "துப்புரவான" மற்றும் "இடறலற்ற" என்ற வார்த்தைகள் ஒன்று மற்றொன்றின் அர்த்தத்தை நிறைவு செய்பவையாக உள்ளன. இவற்றில் முதலாவது பண்பைப் பற்றியதாக இருக்கையில், இரண்டாவது நற்புகழ்ச்சியைப் பற்றியதாக உள்ளது. இவ்விரண்டுமே முக்கியமானவையாக உள்ளன.

பவுல் பிலிப்பி நகரில் இருந்த தமது சகோதர சகோதரிகளுக்காக ஜெபித்த ஜெபத்தின் பட்டியலில், அவர்கள் "நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி" *கனிநிறைந்த வாழ்வில் வளர வேண்டும்* என்பது கடைசி விஷயமாக இருந்தது. "கனி" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப் பட்டிருந்தாலும் இவ்விடத்தில் அது, கர்த்தருக்கு நெருக்கமாக வாழ்வதன் நடைமுறை விளைவுகளைக் குறிக்கிறது: மற்றவர்கள்கூட உற்றுக்கவனிக்கக் கூடிய வகையிலான, கிறிஸ்துவைப் போன்ற பண்புகள். "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலாத்தியர் 5:22, 23). பவுல், தமது வாசகர்கள் அப்படிப்பட்ட "கனி"யினால் "நிரப்பப்பட்டு" இருக்க வேண்டும் என்று ஜெபித்தார். நிறையக் கனிகளைச் சுமந்துள்ள மரத்தின் உருவகம் ஒன்று மனதிற்கு வருகிறது. இயேசு தமது சீஷர்களிடத்தில், "நீங்கள் *மிகுந்த* கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கு சீஷராயிருப்பீர்கள்" என்று கூறினார் (யோவான் 15:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நாம் எவ்வாறு "நீதியின் கனிகளால் நிரப்பப் பட்டிருக்க" முடியும்? கனியானது "இயேசு கிறிஸ்துவின் மூலமாக வருகிறது." உலகப்பிரகாரமான

கனியை உற்பத்தி செய்யும் முயற்சியில் இருப்பது போன்றே, இதிலும் தனிப்பட்ட முயற்சி உள்ளடங்கி இருக்கிறது; ஆனால் உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆகிய இருவகைப்பட்ட கனிகளுக்குமே, கர்த்தரே நிறைவான ஆதாரவளமாக இருக்கிறார். ஒரு எழுத்தாளர், ஒரு மரம் அல்லது திராட்சக் கொடி கனிகளை உற்பத்தி செய்யும்போது அதிகமாக இரைச்சல் எழுப்புவதில்லை என்று சுட்டிக்காண்பித்தார். நமது வாழ்வில், *கர்த்தரே* "கனிகளின்" ஆதாரவளமாக இருக்கிறார் என்று நாம் புரிந்துகொள்ளும்போது, இது நமது மேட்டிமையையும் சுயத்தை உயர்த்துதலையும் நீக்கிப்போட வேண்டும். இயேசு, "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார் (யோவான் 15:5).

நாம் ஏன் இந்தக் "கனிகளினால் நிரப்பப் பட்டிருக்க" வேண்டும்? "தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி" நாம் இதைச் செய்ய வேண்டும். நாம் கூறுகிற அல்லது செய்கிற ஒவ்வொரு விஷயமும் கர்த்தரைக் கனப்படுத்த வேண்டும். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படியாக" வாழுங்கள் (மத்தேயு 5:16). அவ்வாறு செய்வதில், நாமும்கூட ஆசீர்வதிக்கப்படுவோம், ஏனெனில் தேவனை மகிமைப்படுத்தும் விஷயம் மனிதரையும் கண்ணியப்படுத்துகிறது.

## இன்று

10 முதல் 13வரை உள்ள வசனப்பகுதியில் இருந்து தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துதல் என்பது சிரமமானதாக இருப்பதில்லை. எதிர்காலத்தை நம்பிக்கையுடன் கண்ணோக்குதலுக்கு, நாம் அன்றாடம் கர்த்தருடன் நெருக்கமாக வாழுதலும் எல்லாவற்றிலும் அவரை மகிமைப்படுத்துதலும் அவசியமாக உள்ளது.[29] இருப்பினும் நான், இந்தக் கடைசிப் பகுதியின் முதன்மைக் கருத்தாழத்தை வலியுறுத்த விரும்புகிறேன்: பவுல் எதிர்காலத்தைத் தேவனை நோக்கிய ஜெபத்துடன் கண்ணோக்கியதால், அவர் தாம் விலங்கிடப்பட்ட நிலையிலும் சந்தோஷமாக இருந்தார். அவர், கிறிஸ்து மறுபடியும் வரும்போது (வசனங்கள் 6, 10), எல்லாம் சரியாகத் திரும்பும் என்று அறிந்தவராக தேவன் மீது தமது நம்பிக்கையை வைத்தார். நாம், "(நம்மேல்) நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்க" வேண்டும் என்பதைக் கற்றிருந்தார் (2 கொரிந்தியர் 1:9) தீமோத்தேயுவுக்கு அவர், "ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்" என்று கூறினார் (1 தீமோத்தேயு 4:10). "விலங்கிடப்பட்டு" இருக்கிறவர்களுக்கு, அவர்கள் தங்கள் கண்களால் தங்களை நோக்குவதை விட்டுவிட்டு கர்த்தர் மீது அவற்றைப் பதிக்க வேண்டும் என்று கூறுவதைவிட மேன்மையான அறிவுரை எதையும் நான் அறியவில்லை.

## முடிவுரை

நாம் கடந்த காலத்தை நம்பிக்கை இழந்த வகையிலோ அல்லது நன்றி செலுத்தும் வகையிலே கண்ணோக்க முடியும். நாம் நிகழ்காலத்தை கோழைத்தனத்துடனோ அல்லது தைரியத்துடனோ கண்ணோக்க முடியும். நாம் எதிர்காலத்தை அச்சத்துடனோ அல்லது ஜெபத்துடனோ கண்ணோக்க முடியும்.

நாம் நமது சொந்த பலத்தைச் சார்ந்திருக்க முடியும் அல்லது நம் தேவன் மற்றும் இயேசு ஆகியோரைச் சார்ந்திருக்க முடியும். இவற்றில் முதலாவதாக வரும் விருப்பத் தேர்வுகள் சந்தோஷம் இல்லாமைக்கான நிச்சயமான சூத்திரங்களாக உள்ளது. இரண்டாவதாக வருபவை-நம்மைக் "கட்டி" வைத்திருப்பவை எந்த "விலங்காக" இருந்தாலும் சந்தோஷத்திற்கான தேவனுடைய சூத்திரங்களாக உள்ளன.

---

குறிப்புகள்

[1]இந்த உதாரணங்கள் பொதுவானவைகளாக உள்ளன. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வகையில் இவற்றைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [2]பிலிப்பியர் 1:3-11 வசனப் பகுதியானது இந்தப் புத்தகத்தில் "நன்றி செலுத்துதலின்" தொடக்கமாக உள்ளது. இந்தப் பத்தி நன்றி செலுத்துதலுடன் தொடங்குகிறது, ஆனால் இந்தப் பகுதி - நாம் காணப்போகிறபடி - இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. [3]மற்றவர்களுக்காக ஜெபிப்பதின் - மற்றும் அவர்களுக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்கள் என்று அவர்கள் அறியச் செய்தலின் - முக்கியத்துவம் பற்றி ஒரு குறிப்பை இவ்விடத்தில் உட்செருக நீங்கள் விரும்பலாம். [4]பிலிப்பி நகரில் இருந்த சபை, பிரச்சனைகள் நிரம்பி வழிந்ததாக இருக்கவில்லை- ஆனாலும் அது பிரச்சனைகளைக் கொண்டிருந்தது என்று "பவுல் இல்லத்திற்கு எழுதியபோது" என்ற பாடம் வலியுறுத்துகிறது. ஒவ்வொரு சபைக்குழுமமும் மக்களைக் கொண்டதாகவே உள்ளது; மக்கள் பூரணப்பட்டவர்களாக இருப்பதில்லை என்பதால் (ரோமர் 3:23), எந்த சபைக்குழுமமும் பூரணப்பட்டதாக இருப்பதில்லை. [5]அவர்கள் ஒருமுறை பவுலுக்கு உதவி செய்தபின்பு, அவர்கள் நிறுத்திவிடவில்லை என்பதை நீங்கள் வலியுறுத்த விரும்பலாம். சில வேளைகளில் நாம் நல்ல ஊழியங்களைத் தொடங்கிவிட்டு, அவைகள் நிறைவடையுமுன் அவற்றைக் கைவிட்டுவிடுகிறோம் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3:2). [6]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 235. [7]Ibid. [8]Frank Minirth and Paul D. Meier, *Happiness Is a Choice* (Grand Rapids, Mich.: Baker Book House, 1978). [9]Ella Wheeler Wilcox, "The Winds of Fate," in *The Best Loved Poems of the American People,* comp. Hazel Felleman (Garden City, N.Y.: Garden City Books, 1967), 364. [10]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 66.

[11]*Analytical Greek Lexicon,* 373. [12]இன்றைய நாட்களிலும்கூட நான் வாழும் இடத்தில், நாங்கள் உணர்வுப் பூர்வமாக அமைதியற்றுப் போகும்போது, "வயிற்றில் பட்டாம்பூச்சிகள்" அல்லது "வயிற்றுக் குழியில் மோசமான உணர்வு" என்று அதைப் பற்றிப் பேசுவதுண்டு. நீங்கள் வாழும் இடத்தில் இதைப் போன்ற சொற்றொடர்கள் பொதுவாகப் பயன்படுத்தப் படுவதாக இருந்தால், அவற்றை நீங்கள் விவரிப்புகளாகப் பயன்படுத்த முடியும். [13]உலகில் நான் வாழும் பாகத்தில் உள்ள இளைஞர்கள், "கர்த்தரின் அன்புடன் நான் உன்னை அன்புசெய்கிறேன்" என்று கூறும் ஒரு பாடலைக் கொண்டுள்ளனர். உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்தப் பாடலுக்குப் பழக்கமானவர்களாக இருந்தால், நீங்கள் அதைக் குறிப்பிடலாம் அல்லது வகுப்பை அல்லது உரையைக் கேட்பவர்களை அதைப் பாடும்படி கூட வழிநடத்தலாம். [14]*Analytical Greek Lexicon*, 162. [15]உங்கள் உரையைக் கேட்பவர்கள், மேரி பாப்பின்ஸ் என்ற திரைப்படத்திற்குப் பழக்கமானவர்களாக இருந்தால், இவ்விடத்தில் நீங்கள், "மேரி பாப்பின்ஸ் போலின்றி, நாம் 'நடைமுறையில் ஒவ்வொரு வகையிலும் பூரணப்பட்டவர்களாக' இருப்பதில்லை" என்று கூடுதலாகக்

கூறலாம். [16]"Apologetics" கிறிஸ்தவத்தைப் தற்காக்க ஒப்புக்கொடுக்கப்பட்ட மதரீதியான சிந்தனையின் பிரிவைக் குறிப்பிட என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது, இது தேவன், கிறிஸ்து ஆகியோர் மீதும் வேதாகமத்தின் மீதும் விசுவாசம் கொண்டிருந்தலுக்கான காரணங்களை விசேஷமாக வலியுறுத்துவதாகவும் உள்ளது. [17]*Analytical Greek Lexicon,* 45. [18]"அவர் இன்னும் என் மீது கிரியை செய்கிறார்" என்ற பாடலை நாம் விரும்புகிறோம். உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்தப் பாடலுக்குப் பழக்கமானவர்களாக இருந்தால், இவ்வார்த்தைகளை ஒரு விவரிப்பாக நீங்கள் பயன்படுத்த முடியும். [19]இந்த விவரிப்பு Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 40-41 என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது. [20]Ibid., 41.

[21]ஜார்ஜ் பெய்லி என்ற சக ஊழியர், "நீங்கள் உங்கள் எதிர்காலத்தை ஒளிமிக்கதாகவோ அல்லது பனிமூடி ஒளிமிக்கதாகவோ கண்ணோக்க முடியும்"என்று கூறினார். [22]இவ்விடத்தில் "வேண்டுதல் செய்கிறேன்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, ஜெபத்தின் (நன்றி செலுத்துதல் மற்றும் துதி போன்ற) எல்லாக் கூறுகளையும் சுற்றிச் சூழும், ஜெபத்திற்கான பொதுவான வார்த்தையாக உள்ளது. [23]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு நிகழ்ச்சியைத் தேர்ந்துகொண்டு அதைப்பற்றி விவரிக்க நீங்கள் விரும்பலாம். [24]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 629. (Emphasis mine.) [25]*Analytical Greek Lexicon*, 9. [26]James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 265. [27]*Analytical Greek Lexicon*, 118. [28]Ibid., 49.

[29]பவுல், பிலிப்பியருக்காக ஜெபித்த எல்லாக் காரியங்களைக் குறித்தும் மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்புவீர்கள்.